செய்தி வெளியீடு எண்: 101 நாள் : 11.03.2015

**<u>மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை</u>**

**<u>செய்தி வெளியீடு . நாள் 11.3.2015</u>**

மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழக அரசு எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக பன்றிக் காய்ச்சலின் தாக்கம் தமிழகத்தில் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் இந்த நோயின் தாக்கம் இன்னமும் குறைவடையாததால் இந்த நோய் தமிழகத்தில் பரவாமல் தடுக்க பல்வேறு தொடர் நடவடிக்கைகள் தமிழக அரசு எடுத்து வருகிறது. நாள் ஒன்றுக்கு 482 விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு முகாம்கள், சுகாதார பழக்க வழக்கங்களை மக்களிடையே கொண்டு செல்வது, பன்றிக் காய்ச்சல் அறிகுறிகள் உள்ளவர்களுக்கு உலக சுகாதார நிறுவனம் மற்றும் மத்திய அரசின் சுகாதார துறையின் வழிகாட்டுதலின்படி மருந்து வழங்குதல் மற்றும் தேவைக்கேற்ப ஆய்வு மையங்களின் மூலம் கண்டறிதல் மற்றும் சுகாதார பணியாளர்களுக்கு தடுப்பூசி போடுதல் போன்ற நடவடிக்கைகள் தொடர்ந்து எடுத்து வரப்படுகிறது.

இந்த பணிகளைக் கண்காணிக்கும் விதத்தில் சுகாதாரத்துறை, தினந்தோறும் காய்ச்சலின் நிலைமையை கண்காணித்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் மாண்புமிகு சுகாதார அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் பன்றிக்காய்ச்சலை குணப்படுத்தும் Tamiflu மாத்திரை, இந்த காய்சசல் வராமல் தடுக்க மருத்துவப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் தடுப்பூசி மற்றும் இதர மருந்துகளின் நிலவரம் குறித்து அண்ணாநகரில் உள்ள தமிழ்நாடு மருத்துவ சேவைப் பணிகள் கழக கிடங்கில் ஆய்வு மேற்கொண்டார். அப்பொழுது அவருடன் சுகாதாரத்துறை செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு மருத்துவ சேவைப் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் செல்வி அபூர்வா, பொது சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் கே.குழந்தைசாமி, மாநகராட்சி சுகாதார அலுவலர் டாக்டர் ஜெகதீசன் மற்றும் உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

அப்பொழுது தமிழகத்தில் 6.75 இலட்சம் Tamiflu மாத்திரைகள் கையிருப்பில் உள்ள விவரத்தினையும், சுகதாரப்பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய 50,000 தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ள விவரத்தினையும் கேட்டறிந்து அதனைப்பெற்று மாவட்டந்தோறும் விநியோகம் செய்யும் முறைகளையும், மாண்புமிகு அமைச்சர் ஆய்வு செய்தார்.

தமிழ்நாடு மருத்துவ சேவைப் பணிகள் கழகத்தை பொறுத்தவரை மாநிலம் முழுவதும் உள்ள 25 மருத்துவக் கிடங்குகளின் வாயிலாக Tamiflu மாத்திரையும்,

தடுப்பூசியும் வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டங்களைப் பொறுத்தவரை சுகாதாரத் துணை இயக்குநர் வாயிலாக இந்த மாத்திரை தேவைக்கேற்ப மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தனியார் மருத்துவமனைக்ளுக்கு தேவைப்பட்டால் கூட இதனை இலவசமாக வழங்க தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது.

இதனைத் தொடர்ந்து சுகாதாரத்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகத்தின் மாநிலத்திற்கு தேவையான ஒட்டுமொத்த மருந்துக் கொள்முதல் குறித்தும், ஆய்வு மேற்கொண்டார். இந்தக் கழகம், தரமான மருந்துகளை மிகக் குறைந்த விலையில் ஒப்பந்தப் புள்ளிகள் மூலம் பெற்று தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அனைத்து மருத்துவ நிலையங்களுக்கும் வழங்கி வருகின்றது. இக்கழகத்தின் மூலம் 309 அத்தியாவசிய மருந்துகள், 197 மருத்துவ அறுவை மற்றும் தையல் உபகரண சாதனங்கள், 347 சிறப்பு மருந்துகள் மற்றும் 5 இரத்த உறைதல் சம்பந்தப்பட்ட மருந்துகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்சமயம், அனைத்து வகையான மருந்துகளும் தேவையான அளவு கொள்முதல் செய்யப்பட்டு 25 மாவட்ட மருத்துவ கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இம்மருந்துகளை மருத்துவ நிலையங்கள் தங்களது தேவைக்கேற்ப கால முறை சுழற்சியின் மூலம் பெற்று வருகின்றன. தேவையான அத்தியாவசியமான மருந்துகள் அனைத்தையும் கொள்முதல் செய்ய நடப்பு ஆண்டு 11.03.2015 அன்று வரை ரூபாய் 315.63 கோடி மதிப்பிற்கு அனுமதிக்கப்பட்டு உள்ளது. சிறப்பு மருந்துகள் கொள்முதல் செய்ய நடப்பு ஆண்டு 11.03.2015 வரை ரூபாய் 50.18 கோடி மதிப்பிற்கு அனுமதிக்கப்பட்டு உள்ளது. இரத்த உறைதல் தொடர்பான மருந்துகள் கொள்முதல் செய்ய நடப்பு ஆண்டு 11.03.2015 வரை ரூபாய் 14.40 கோடி மதிப்பிற்கு அனுமதிக்கப்பட்டு உள்ளது. தற்சமயம் தேவையான அளவிற்கு அனைத்து மருந்துகளும் கையிருப்பில் உள்ளன. இக்கழகத்தினால், மருந்து நிறுவனங்களுக்கு கொள்முதல் ஆணைகள் ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்டு மருந்துகள் அனைத்தும் தொடர்ச்சியாக பெறப்பட்டு வருகின்றன. தற்சமயம் அனைத்து மருந்து கிடங்குகளிலும் அனைத்து வகையான மருந்துகளும் இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்பட்டு வருகின்றன. தற்போது இருப்பு உள்ள மொத்த மருந்துகளின் மதிப்பு 11.03.2015 நாள் நிலவரப்படி ரூபாய் 90 கோடி ஆகும். தொடர்ச்சியாக கொள்முதல் ஆணைகள் வழங்கப்பட்டு மருந்து வரத்து மற்றும் மருந்து இருப்பு கண்காணிக்கப்படுகிறது.

**<u>களஆய்வு :</u>** இதனைத் தொடர்ந்து மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சரும் அதிகாரிகளும், பொதுமக்களிடையே விழிப்புணர்வு மற்றும் கண்க்காணிப்பு ஏற்படுத்தும் பணிகளை கோயம்பேடு மாநகர பேருந்து நிலையத்தில் பார்வையிட்டு பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

**விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள்: 10** லட்சத்திற்கும் மேற்பட்ட விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும் பல்வேறு தொண்டு நிறுவனங்கள் வாயிலாகவும் இத்தகைய கையேடுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

**தகவல் மையம்:** பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குனரகத்தில், பன்றிக் காய்ச்சல் மற்றும் அனைத்து வகையான காய்ச்சல்கள் குறித்து **24** மணி நேரமும் மருத்துவ ஆலோசனைகள் பெறும் வகையில் தகவல் மையம் (தொலைபேசி எண் **044–24350496, 044–24334811, 94443 40496** மற்றும் **93614 82899**) ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் தகவல்கள் பெற '104' சேவையையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**பன்றிக் காய்ச்சல் வராமல் தடுக்க சுகாதாரமான வழிமுறைகள்:** பன்றிக் காய்ச்சல் வராமல் தடுக்க கீழே குறிப்பிடப்பட்டுள்ள சில சுகாதாரமான வழிமுறைகளை பொதுமக்கள் பின்பற்றவேண்டும்:

- இருமும் பொழுதும், தும்மும் பொழுதும் கைக்குட்டையால் முகத்தை மறைத்துக்கொள்ள வேண்டும். மேலும் அடிக்கடி சோப்பு போட்டு கைகளை நன்றாக தேய்த்து கழுவ வேண்டும்.

- குறிப்பாக வீட்டிலிருந்து பணியிடம் மற்றும் வெளியிடங்களுக்கு சென்றவுடன் ஒரு முறை கைகளை நன்றாக கழுவ வேண்டும். மீண்டும் வீடு திரும்பியவுடன் ஒரு முறை கைகளை கழுவ வேண்டும்.

- காய்ச்சல், சளி, இருமல், தொண்டைவலி போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனே மருத்துவரை அணுகி பரிசோதித்துக் கொள்ளவேண்டும்.

- சுயமாக மருந்துகள் உட்கொள்வதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். மேலும் மருந்துக் கடைகளில் மருத்துவரின் சீட்டு இல்லாமல் மருந்துகளை வாங்கி உட்கொள்வதையும் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

தமிழகத்தில் பன்றிக் காய்ச்சலைக் தடுப்பதற்கு தேவையான தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும், காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுமையான உடனடி சிகிச்சை அளிக்கவும் அனைத்து ஏற்பாடுகளும் மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி செய்யப்பட்டுள்ளன. எனவே பன்றிக் காய்ச்சல் தொடர்பாக பொதுமக்கள் பீதியடைய வேண்டாம் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

----

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை.9**